DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, ATTUR.

| | | |
|---|---|---|
| CC / STC. No | .. | **CC**. 41/2025 |
| Deposition of Witness for | | PW-1(LW 1) |
| | | Prosecution |
| | | Court |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | **திருமதி. மூவரசி** | Taluk | : | தலைவாசல் |
| Father/Husband Name | : | க.பெ. திரு. கொடியரசு | Calling | : | இல்லத்தரசி |
| Village | : | கிழக்கு ராஜபாளையம் | Age | : | 24 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 19.05.2026.

**எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை.**

**சாட்சி முன்னிலையானார். உறுதிமொழி எடுக்கப்பட்டது. முதல்விசாரணை துவக்க நேரம்** 12.45

1. எனக்கு கடந்த 10.03.2023 அன்று நரசிங்கபுரத்தை சேர்ந்த மாணிக்கம் மகன் கொடியரசு என்பவருடன் திருமணம் நடைபெற்றது. திருமணம் ஆன சிறிது காலம் என்னை எனது கணவர் வீட்டில் நல்ல முறையில் பார்த்து கொண்டார்கள். பின்பு எனது மாமானார் மாணிக்கமும், எனது மாமியார் சாந்தியும், எனது கணவர் வெளியில் சென்ற பிறகு என்னை பார்த்து, "சனியனே வக்கு இல்லாதவள் என்ன கொண்டு வந்தாய் வீட்டை விட்டு வெளியே போ" என்று திட்டினார்கள்.

2. மேலும் எனது மாமானாரும், மாமியாரும் சேரில் உட்கார கூடாது என்றும், FAN போடக்கூடாது என்றும் திருமணத்தின்போது எனக்கு எனது பெற்றோர்கள் வரதட்சனை ஏதும் கொடுக்கவில்லை என்று கேவலமாக பேசியிருந்தார்கள்.

3. எனது கணவர் அவர்களது பெற்றோருக்கு தெரியாமல் வெளியில் ரூ.40,000/- கடன் வாங்கியிருந்தார். அதை எனது கணவர் வேலைக்கு செல்லும் சம்பளத்தை பெற்று மாதம் அந்த கடனை திருப்பி செலுத்தியதால் மாத சம்பளத்தை எங்களிடம் ஏன் கொடுக்கவில்லை என்று எனது மாமானாரும், மாமியாரும் என்னிடமும், எனது கணவரிடமும் கேட்டார்கள். அதற்கு கோவித்து கொண்டு எனது கணவர், ஒரு நாள் இரவு 01 மணி வரைக்கும் வீடு திரும்பாததால் நீ என்னடி சொன்ன என் பிள்ளை வீடு வரவில்லை என்று சொல்லி, என்னை வீட்டிற்கு உள்ளே வரவிடவில்லை. மேலும் எனது போனையும் பிடிங்கி வைத்து கொண்டதால் நான் எனது பெற்றோருக்கு தகவல் தெரிவித்து எனது பெற்றோர்கள் வந்து என்னை அழைத்து சென்றார்கள். பின்பு ஒரு மாதம் எனது பெற்றோர்கள் வீட்டில் இருந்தேன். பின்பு எனது கணவரின் தாய்மாமா என்னிடம் சமாதானம் பேசி அவரது வீட்டிற்கு அழைத்து சென்று அங்கே 04 மாதம் தங்கியிருந்த போது என்னை நன்றாக பார்த்து கொண்டார்கள்.

4. பின்பு குழந்தைபேறுக்காக நான் எனது பெற்றோரின் வீட்டிற்கு சென்றபிறகு எனது கணவர் என்னிடம் பேசுவதை நிறுத்தி விட்டார். இதனால் சந்தேகம் அடைந்த நான், எனது சின்ன மாமானாருக்கு போன் செய்து கேட்டபோது, எனது கணவர் கள்ளகுறிச்சியை சேர்ந்த சரிதா என்பவரை இரண்டாவது திருமணம் செய்து கொண்டது எனக்கு தெரியவந்தது. எனக்கு குழந்தை பிறந்து 03 மாதம் கழித்து எனது கணவரிடம் சென்று

இரண்டாவது திருமணத்தை பற்றி கேட்க நானும், எனது பெற்றோர்களும் மற்றும் உறவினர்களோடு கடந்த 07.04.2024 அன்று காலை 10.00 மணியளவில் எனது கணவர் வீட்டிற்கு சென்று பார்த்தபோது கதவு பூட்டியிருந்ததது. கதவை தட்டியபோது எனது நாத்தனார் கதவை திறந்தார். நான் எனது குழந்தையுடன் வீட்டிற்கு உள்ளே சென்று சோபாவில் உட்கார்ந்து இருந்தபோது எனது நாத்தனார் எனது முடியை பிடித்து இழுத்து வீட்டை விட்டு வெளியே போ என்று திட்டினார். பின்பு எனது கணவரும் எனது மாமானார் மாமியாரும் அங்கு வந்து விட்டார்கள். மேற்படி நபர்கள் அனைவரும் ஒன்றாக சேர்ந்து என்னையும், எனது பெற்றோர்களையும் வீட்டை விட்டு வெளியே போங்க என்றும், தேவிடியா நாயே என்ற கெட்ட வார்த்தைகளால் திட்டி வீட்டை விட்டு விரட்டினார்கள்.

5. மேலும் எனது மாமானார் எனது அப்பாவின் முதுகில் அடித்து விட்டார்.எனது மாமியார் எனது அம்மாவையும் அடிக்க வந்தார். மேலும் எனது கணவர் புள் அறுக்கும் அறுவாளை காட்டி என்னை கொன்று விடுவேன் என்று மிரட்டினார். அக்கம் பக்கதினர் வந்து என்னை காப்பாற்றினார்கள். நான் கொடுத்த புகாரில் விசாரணைக்காக சேலம் ஆட்சியர் அலுவலகத்திற்கு சென்று அங்கு எனது குழந்தைக்கு பால் கொடுத்து கொண்டிருக்கும் போது அங்கு என்னை தவிர யாரும் இல்லாததால் எனது கணவர் என்னை எட்டி உதைத்ததால் நான் அவரை திருப்பி அடித்தேன். நான் ஏதோ எனது கணவரை அடித்து விட்டதாக பொய்யான சங்கதிகளை கூறி கொடுக்கப்பட்ட பொய் புகாரில் ஆட்சியர் அலுவலகத்திற்கு வந்த காவல் துறை அதிகாரிகளிடம் அங்கு பணிபுரிந்த ஒரு நபர் அவ்வாறு நான் எனது கணவரை அடிக்க வில்லை என்றும் எனது கணவர் தான் எட்டி உதைத்தார் என்று சொன்னதின்பேரில் எனது புகார் மனு

முடிக்கப்பட்டது.

6. இது சம்மந்தமாக போலிசாரிடம் புகார் கொடுத்தேன். மேலும் என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **(புகார் மனு அ.த.சா. ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**முடிவு நேரம் 01.15**

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை என்பதால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

Taken Down by me in Open Court Read over to the Dependant in the presence of the accused and admitted by the Dependant to be correct

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.05.19 17:56:08 +0530

Judicial Magistrate No.1(FAC),

Attur.